பண பரிவர்த்தனை
அறிக்கைகளை பின்வரும்
முகவரியில் சமர்ப்பிக்க வேண்டும்:

Suspicious Transaction Reporting Office
391 New Bridge Road #06-701
Police Cantonment Complex Block D
Singapore 088762



**SINGAPORE POLICE FORCE**

மேல் விவரங்களுக்கு,
Suspicious Transaction Reporting Office-ஐ
**stro@spf.gov.sg** என்ற மின்னஞ்சல்
வழியாகவோ, **+65 6220 4716** என்ற
எண்ணிலோ தொடர்புகொள்ளவும்

நீங்கள் **www.police.gov.sg** என்ற சிங்கப்பூர்
காவல் படையின் இணையத்தளத்திற்கும்
செல்லலாம்.

# நீங்கள் SGD 20,000-க்கும் அதிகமாகப் பணம் கட்டினீர்களா ?



சட்டப்படி, இரத்தினக்கற்கள் அல்லது விலையுயர்ந்த உலோகங்கள் விற்கும் வியாபாரி ஒருவர், எந்தவொரு இரத்தினக்கல்லையோ, விலையுயர்ந்த உலோகத்தையோ அல்லது விலையுயர்ந்த பொருளையோ ரொக்கமாக விற்பனை செய்யும்போது அல்லது ஒரே நாளில் தொடர்புடைய 2 அல்லது அதற்கும் மேற்பட்ட பரிவர்த்தனையில் ரொக்கமாக விற்பனை செய்யும்போது, அந்தப் பண பரிவர்த்தனைகளின் மொத்த மதிப்பு SGD 20,000 – க்கும் அதிகமாக (அல்லது அதற்கு சமமான அயல்நாட்டுப் பணம்) இருந்தால். அதுகுறித்து அறிக்கை ஒன்று அளிக்க வேண்டும்.

## யார் பண பரிவர்த்தனை அறிக்கையைச் சமர்ப்பிக்க வேண்டும்?

தொழில் சார்ந்த முறையில், எந்தவொரு நபரும் எந்தவொரு இரத்தினக்கல்லையோ, விலையுயர்ந்த உலோகத்தையோ அல்லது விலையுயர்ந்த பொருளையோ உற்பத்தி செய்கின்றாரோ, விற்கின்றாரோ, விற்பனைக்கு தருகின்றாரோ, விற்பனைக்கு இறக்குமதி செய்கின்றாரோ அல்லது விற்பனைக்கு வைத்திருக்கின்றாரோ, அந்த இரத்தினக்கல்லையோ, விலையுயர்ந்த உலோகத்தையோ அல்லது விலையுயர்ந்த பொருளையோ வாடிக்கையாளர் ஒருவருக்கு ரொக்கமாக விற்பனை செய்யும்போது அல்லது ஒரே நாளில் தொடர்புடைய 2 அல்லது அதற்கும் மேற்பட்ட பரிவர்த்தனையில் ரொக்கமாக விற்பனை செய்யும்போது, அந்தப் பண பரிவர்த்தனைகளின் மொத்த மதிப்பு SGD 20,000 - க்கும் அதிகமாக (அல்லது அதற்குச் சமமான அயல்நாட்டுப் பணம்) இருந்தால் அவர் அறிக்கை* ஒன்று சமர்ப்பிக்க வேண்டும்.

இத்தகைய நபர்கள், இரத்தினக்கற்கள் மற்றும் விலையுயர்ந்த உலோகங்கள் விற்கும் வியாபாரிகள் (PSMD) என்று அழைக்கப்படுவர். PSMD-க்கள், குறிப்பிட்ட எந்தவொரு நாளிலோ, தொடர்புடையதாக தோன்றும் (உதாரணத்திற்கு, அதே வாடிக்கையாளரால் வாங்கப்பட்டது அல்லது அதே நபர்/வர்த்தகம் சார்பில் வாடிக்கையாளர் வாங்கியுள்ளார் என வியாபாரிக்கு தெரியும்) பல பண பரிவர்த்தனைகளை ஒன்றுகூட்டி மொத்தமாக சேர்க்கவேண்டும். இது, பரிவர்த்தனைகள் SGD 20,000-த்தை தாண்டியுள்ளதா என்பதை உறுதிப்படுத்தும்.

யாராவது அறிக்கையை சமர்ப்பிக்கத் தவறினால், SGD 20,000-க்கு மேற்போகாத அபராதம் அல்லது 2 வருடத்திற்கு மேற்போகாத சிறைத்தண்டனை அல்லது இரண்டும் கிடைக்கலாம்

** நிபந்தனையுடன் கூடிய விற்பனை ஒப்பந்தம் அல்லது தவணைமுறை ஒப்பந்தம் கீழ் வருகின்ற இரத்தினக்கல், விலையுயர்ந்த உலோகம் அல்லது விலையுயர்ந்த பொருள் ஆகியவற்றின் கையிருப்பும், எந்தவொரு இரத்தினக்கல், விலையுயர்ந்த உலோகம் அல்லது விலையுயர்ந்த பொருளின் "விற்பனை"யில் அடங்கும். நிபந்தனையுடன் கூடிய விற்பனை ஒப்பந்தம் அல்லது தவணைமுறை ஒப்பந்தம்கீழ் கையிருப்பை வழங்குவது என்பது "விற்பது" என்பதில் உள்ளடங்கும்.*



## இரத்தினக்கல், விலையுயர்ந்த உலோகம் அல்லது விலையுயர்ந்தப் பொருள் என்றால் என்ன?

| | |
|---|---|
| இரத்தினக்கல் | வைரங்கள், நீலமணிக்கல், மாணிக்கம், மரகதம் அல்லது கரும்பச்சை மணிக்கல் (நெஃப்ரைட் மற்றும் ஜெடெய்ட்) முத்துக்கள் |
| விலையுயர்ந்த உலோகம் | தங்கம், வெள்ளி, பிளாட்டிணம் இரிடியம், ஆஸ்மியம் பல்லேடியம், ரோடியம், ருதெனியம் எடையில் 2% விலையுயர்ந்த உலோகம் உள்ள உலோகக் கலப்பு |
| விலையுயர்ந்த பொருள் | செய்து முடிக்கப்பட்ட எந்தவொரு பொருளில், (தொழில் கருவிகள் அல்லது மருத்துவ சாதனங்கள் தவிர) அதன் மதிப்பில் 50% அல்லது அதைவிட அதிகமாக - இரத்தினக்கற்கள் அல்லது விலையுயர்ந்த உலோகங்களிலிருந்து வருவது |

## எதற்காக பண பரிவர்த்தனை அறிக்கையை சமர்ப்பிக்க வேண்டும்?

பணமோசடி, பயங்கரவாதத்திற்கு பண உதவி மற்றும் ஏனைய குற்ற நடவடிக்கைகளை எதிர்த்துப் போராடுவதற்காக இப்பண பரிவர்த்தனை அறிக்கை சமர்ப்பித்தல் சட்டமாக கொண்டுவரப்பட்டது.

## நான் ஒரு வாடிக்கையாளர். நான் பண பரிவர்த்தனை அறிக்கை சமர்ப்பிக்க வேண்டுமா?

இல்லை, உங்களிடம் இரத்தினக்கற்களை அல்லது விலையுயர்ந்த உலோகங்களை விற்கும் நபர் அறிக்கையை சமர்ப்பித்திடுவார்.

## என்னிடம் இருந்து என்ன தேவைப்படுகிறது?

அடிப்படை அடையாள ஆவணங்களையும், உங்கள் பெயர், தொடர்பு எண், முகவரி, தொழில் மற்றும் அறிக்கையில் கேட்கப்பட்ட இதர தகவல்கள் போன்ற தனிப்பட்ட தகவலையும் அளிக்கும்படி நீங்கள் கேட்டுக்கொள்ளப்படுவீர்கள். நீங்கள் மற்றொருவர் அல்லது வர்த்தகம் சார்பில் பரிவர்த்தனை மேற்கொண்டால், பணம் எங்கிருந்து வந்தது அதன் மூலம் என்ன போன்ற விவரங்களை தெரிவிக்க வேண்டும். நீங்கள் அளிக்கும் அனைத்துத் தகவலும் இரகசியமாக வைத்திருக்கப்படும்

## நான் ரொக்கமாக பணம் செலுத்தலாமா?

ஆம், விற்பவரால் ஏற்றுக்கொள்ளப்படும் எந்த முறையிலும் நீங்கள் பணத்தைச் செலுத்தலாம்.